# ஜோலார்பேட்டை நகராட்சி
## அவசரக் கூட்டம்

**2021**ம் ஆண்டு ஜனவரி மாதம் **12.01.2021**ம் நாள் செவ்வாய்கிழமை காலை **11.00** மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் தனிஅலுவலர் அவர்களால் நடத்தப்பட உள்ள அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

தனி அலுவலர்

**பொருள் எண்.1**

ஜோலார்பேட்டை நகராட்சி, பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் 16 துய்மை பணியாளர்கள், ஒரு மேற்பார்வையாளர், ஒரு பொது சுகாதாரப்பிரிவு ஓட்டுனர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்களுக்கு சீருடை மற்றும் சீருடை தையல் கூலி மற்றும் காலனிகள் 2021-2022ம் ஆண்டிற்கு வாங்கி வழங்குவதற்கான தோராய செலவினத் தொகை ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2/2021/**எச்**1

**பொருள் எண்.2**

ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி **2019–20**ம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர்/ பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பத்தூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ**4/1795/2019** நாள்.**12.01.2021**ல் ரூ.**5.00** இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி வாலட்டியூர் (காந்திரோடு) வார்டு எண்.**11**ல் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டு செயல்முறைகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேற்படி பணியினை திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரி செயல்படுத்தலாம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாவட்ட ஆட்சித்தலைவர்/ பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பத்தூர் அவர்களின் நிர்வாக அனுமதியினை மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்: இ1/46/2021

# ஜோலார்பேட்டை நகராட்சி

## அவசரக் கூட்டம்

2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 12.01.2021ம் நாள் செவ்வாக்கிழமை காலை 11.00 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் தனிஅலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட அவசரக் கூட்ட தீர்மானங்கள்

| வ.எண் | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 157 | அலுவலக குறிப்பு அங்கிகரிக்கப்பட்டது |
| 2 | 2 | 158 | அலுவலக குறிப்பு அங்கிகரிக்கப்பட்டது |

தனி அலுவலர்
ஜோலார்பேட்டை நகராட்சி